மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., M.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.
2022ம் வருடம் மார்ச் மாதம் 05ம் நாள்
ஸ்ரீபிலவ ஆண்டு மாசி மாதம் 21ம் நாள் வெள்ளிக்கிழமை

**EA.No.01/2022**
**in**
**E.P.No. 27/2008**
**in**
**OS.No. 54-2003**

T .கவிதா

..... மனுதாரர்/3ம் தரப்பினர்

//எதிர்//

1. A. காமாட்சி (எ) காமாட்சி பிள்ளை
2. A. தமிழ்செல்வம் (எ) போஸ்
3. ஆவுடையம்மாள் ..... 1 to 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

ஆகியோர்கள் தங்களது அதிகாரம் பெற்ற V. ராதாகிருஷ்ணன் மூலமாக

4. R. சுப்பிரமணியன்
5. R. சேதுராமன்

..... 4,5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த நிர் மனுவும் 07.01.2022ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/3ம் தரப்பினர் தரப்பில் வழக்கறிஞர் **திரு.M. வெங்கடேசன்** அவர்கள் ஆஜராகியும், 1 to 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.**K.K.ரவி** அவர்கள் ஆஜராகியும், 4,5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் நிறைவேற்றுதல் மனுவில் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும், கடந்த 15.02.2022ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

## உத்தரவு

இந்த நிர் மனுவும் மனுதாரர்/3ம் தரப்பினர் தரப்பில் மனுவில் கண்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை இந்த நிர் நிறைவேற்றுதல் மனுவான E.P.No. 27/2008 வழக்கு கோப்பில் உள்ள ஆவணங்களின் நகல்களை நீதியின் நலன் கருதி மனுதாரர்/3ம் தரப்பினருக்கு வழங்க உத்திரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் சட்டப்பிரிவு 151ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1) மனுதாரர்/3ம் தரப்பினர் தரப்பு வாதுரையின் சுருக்கம்:

மனுதாரர் இந்த நிர் நிறைவேற்றுதல் மனுவில் 3ம் தரப்பினர் என்றும், நிறைவேற்றுதல் மனுவில்

கண்ட சொத்துக்களைப் பொறுத்து அசல் வழக்கு தாக்கல் செய்து, அசல் வழக்கில் பிறப்பிக்கப்படடட தீர்ப்பின் பேரில் நிறைவேறுதல் மனுவில் கண்ட சொத்துக்களை ஒப்படைப்பு செய்யக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிறைவேற்றுதல் மனு சொத்துக்கள் வாடிப்பட்டி வட்டம், நீரேத்தான் கிராமம். சர்வே எண். 10/6C1 மற்றும் 13/7B, புதிய சர்வே எண் 13/113ன்படி பட்டா எண். 2248ல் கட்டுப்பட்ட 24-1/2 செண்ட் நிலச்சொத்தானது மனுதாரரின் கணவர் சு. தமிழ்செல்வன் என்பவருக்கு உயில் மூலம் பாத்தியப்பட்டு அவரது பெயருக்கு பட்டா ஏற்பட்டு அவர் அனுபவம் செய்து வந்த நிலையில் கடந்த 20.12.2010ம் தேதியில் மனுதாரரின் கணவர் இறந்து விட்டார். மேற்படி மனுதாரரின் கணவர் உயிருடன் இருந்தபோது, நிறைவேற்றுதல் மனு EP.No. 27/2008 மனுவில் E.A.No. 26/2008 கோரிக்கை மனுவினை தாக்கல் செய்து மேற்படி மனுவில் கடந்த 27.01.2010ம் தேதியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பதும், அதனடிப்படையில் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் சர்வே எண். 10/6C மற்றும் 13/113 சொத்துக்களை சுவாதீனம் எடுக்க மனு செய்திருப்பதும் தற்சமயம் தான் மனுதாரர்/3ம்தரப்பினருக்கு தெரியவந்தது என்றும், மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பாதுகாக்க சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு மனுவில் கண்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை மனுதாரருக்கு வழங்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி சான்றிட்ட நகல்கள் மனுதாரர் தரப்பிற்கு அவசியமானது என்பதோடு, நகல்கள் வழங்கப்படாவிட்டால் மனுதாரருக்கு பெருத்த இழப்பு ஏற்படும் என்பதால், மனுவினை அனுமதிக்கும்படி வேண்டப்பட்டது.

## <u>2) 2ம் எதிர்மனுதாரர்/ 2ம் வாதி தரப்பு எதிர்வாதுரையின் சுருக்கம்.</u>

1ம் மனுதாரர்/1ம் பிரதிவாதி, 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியின் சகோதரர் என்றும், 3ம் எதிர்மனுதாரர், தாயார் என்றும், 3ம் எதிர்மனுதாரர் ஏற்கனவே இறந்து விட்டார் என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு தவறானது என்றும், மனுசொத்தானது மனுதாரரின் கணவரான S. தமிழ்செல்வம் த/பெ. சுப்பாரெட்டி என்பவருக்கு உயில்மூலம் பாத்தியப்பட்டு, அவர் பெயரில் பட்டா ஏற்பட்டு அனுபவம் செய்து வந்ததாக கூறுவது பொய்யானது ஆகும். உண்மையில் மனுதாரரின் கணவரால் இந்த நிர் நிறைவேற்றுதல் மனுவில் EA.No. 26/2008 மனு தாக்கல் செய்து மேற்படி மனுவும் கடந்த 27.01.2010-ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி தள்ளுபடி உத்திரவினை எதிர்த்து மனுதாரரின் கணவர் மேல்முறையீடோ, சீராய்வு மனுவோ தாக்கல் செய்யவில்லை. மேலும் இந்த நிர் மனுதாரர் EA.No. 26/2008 மனுவில் தரப்பினர் அல்ல. எனவே மனுதாரருக்கு பாத்தியப்படாத சொத்தைப்பொறுத்து EP.No. 27/2008 கோப்பில் உள்ள ஆவணங்களின் நகல்களை நீதிமன்றம் வழங்க இயாது என்றும், இந்த நிர் மனுவின் எதிர்மனுதாரர்கள் 2003ல் தீர்ப்பும்/தீர்ப்பாணையும் பெற்றுள்ள நிலையில், 3ம்தரப்பினர் மனுத்தாக்கல் செய்து தீர்ப்பாணையின் பலனை அடையமுடியாமல் செய்வது சட்டப்படியும், நியாயப்படியும் தவறானது என்றும், எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது.

3) மனுதாரர்/3ம் தரப்பினர் தாக்கல் செய்த நிர் மனுப்பரிகாரம் கிடைக்கக்கூடியதா என்பதை தீர்வு காண வேண்டிய பொருண்மை ஆகும்.

**தீர்வு:**

**4)** இருதரப்பு வாதுரை மற்றும் வழக்கு பொருண்மைகளை பரிசீலனை செய்ததில், இந்த நிர் மனுவும் மனுதாரர்/3ம் தரப்பினரால் நிறைவேற்றுதல் மனு எண். EP.No. 27/2008 கோப்பில் உள்ள இம்மனுவுடன் தாக்கல் செய்த யாதஸ்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்களை வழங்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தமிழ்செல்வன் என்பவரது மனைவி என்றும், மேற்படி தமிழ்செல்வன் என்பவர் நிறைவேற்றுதல் மனு எண். EP.No. 27/2008 மனுவில் இடைக்கால மனு எண். EA.No. 26/2008ன்படி கோரிக்கை மனு தாக்கல் செய்து அதுவும் கடந்த 27.01.2010ம் தேதியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி மனுதாரரின் கணவரான தமிழ்செல்வன் கடந்த 20.12.2010ம் தேதியில் இறந்து விட்டார் என்றும், மேற்படி நிறைவேற்றுதல் மனுவில் மனுதாரரின் கணவரான தமிழ்செல்வன் என்பவர் நடவடிக்கை எடுத்த விபரம் தற்சமயம் தான் மனுதாரருக்கு தெரியவந்தது என்றும், நிறைவேற்றுதல் மனுவில் கண்ட பரிகாரத்தினை நிறைவேற்றும் பொருட்டு சர்வே எண். 10/6C1, 13/113 சொத்துக்களை நீதிமன்ற அமீன் மூலம் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் வசம் ஒப்படைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தபோது தான் மேற்படி வழக்கு நடவடிக்கை பற்றிய விபரம் மனுதாரருக்கு தெரியவந்தது என்றும், எனவே மனுதாரருக்கு பாத்தியமான பழைய சர்வே எண். 10/6C, 13/7B ஆக இருந்து தற்சமயம் சர்வே எண். 13/113 பட்டா எண் 2248ல் கட்டுப்பட்ட 24-1/2 செண்ட் சொத்தினை பாதுகாக்கும் பொருட்டு தகுந்த சட்டப்பூர்வ நடவடிக்கை எடுப்பதற்கு யாதஸ்தில் கண்டுள்ள ஆவணங்களின் நகல்களை வழங்க வேண்டியது அவசியமானது என்றும் எனவே மனு அனுமதிக்கப்படவேண்டுமென்றும் வாதுரைக்கப்பட்டது.

5) மாறாக எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரரின் கணவர் அவரது ஆயுள் காலம் வரை தாவா சொத்துக்களை அவரது பெயருக்கு பட்டா பெற்று அனுபவம் செய்து வந்ததாக குறிப்பிட்டுள்ளது தவறானது என்றும், மனுதாரரின் கணவர் இந்த நிர் நிறைவேற்றுதல் மனுவில் தாக்கல் செய்துள்ள இடைக்கால மனு EP.No.26/2008 மனுவானது கடந்த 27.01.2010ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மேற்படி மனுதாரர் இந்த நிர் நிறைவேற்றுதல் மனுவில் 3ம் தரப்பினர் என்ற அடிப்படையிலும், மனுதாரர் கோரியுள்ள ஆவணங்கள் பொது ஆவணங்களாக இல்லாததாலும், மேற்படி ஆவணங்களின் நகல்களை சட்டப்படி வழங்க இயலாது என்றும், மனுதாரரின் கணவர் தாக்கல் செய்த இடைக்கால மனு எண். EA.No. 26/2008 தள்ளுபடி செய்து வழங்கப்பட்ட உத்திரவின் பேரில் எவ்வித மேல்முறையீடோ சீராய்வோ தாக்கல் செய்யப்படவில்லை என்றும், 2003ம் வருடம் தீர்ப்பாணை பெற்று தீர்ப்பாணையின் பலனை பெற விடாமல், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தொடர்ந்து சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்றும், எனவே மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், எதிர்வாதம் செய்யப்பட்டது.

6) இருதரப்பு வாதுரைகளை பரிசீலனை செய்ததில், மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்று ஆவணங்களில் முதலாவதாக உள்ள ஆவணமான தமிழ்செல்வன் த/பெ. சுப்பாநாயுடு

என்பவரது இறப்பு சான்றிதழிலிருந்து மனுதாரரின் கணவர் தமிழ்செல்வன் ஏற்கனவே இறந்து விட்டார் என்பது தெரியவருகிறது. அதேபோல் மேற்படி மனுதாரர், இறந்த தமிழ்செல்வன் என்பவரின் மனைவி என்பதற்கு அவரது ஆதார் அடையாள அட்டை நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேபோல் தமிழ்செல்வன் என்பவர் பெயரில் உள்ள சர்வே எண். 13/113 சொத்திற்கு பட்டா எண் 2248ன்படியான பட்டா மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி இறந்த தமிழ்செல்வன் என்பவரது மனைவியாக மனுதாரர் கவிதா மற்றும் மகன் குருபிரசாத் மற்றொரு மகன் குருபிரசன்னா, மற்றும் தாயார் சசிகலா என்பது தெரியவருகிறது. மேற்படி தமிழ்செல்வன் என்பவர் இந்த நிர் நிறைவேற்றுதல் மனுவில் தாக்கல் செய்யப்பட்ட EA.No. 26/2008 ன்படி மனு தாக்கல் செய்து அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த நிர் மனு பரிகாரமும் நிறைவேற்றுதல் மனு மற்றும் அது தொடர்பான நகல்களை பெறுவதற்கு மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனுவில் வழக்கு தரப்பினர்களுக்கிடையேயான உரிமையை தீர்வு காண இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மனுதாரரின் கணவர் தமிழ்செல்வன் இந்த நிர் நிறைவேற்றுதல் மனுவில் பங்கு பெற்ற தரப்பினராக இருந்து வருகின்ற நிலையில், மனுவில் கோரியுள்ள ஆவணங்களின் நகல்கள் மனுதாரருக்கு சட்டப்படி கிடைக்கக்கூடியது என்றே தீர்வு கண்டு இம்மனு அனுமதிக்கப்படுகின்றது.

இறுதியாக, மனுவில் கோரியுள்ள ஆவணங்களின் நகல்கள் மனுதாரருக்கு சட்டப்படி கிடைக்கக்கூடியது என உத்தரவிடப்படுகின்றது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

D RAMGANESH
Digitally signed by D RAMGANESH
Date: 2022.03.05 16:54:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வாடிப்பட்டி.